உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

| மலர் 2.] | நளஸூ சித்திரைமீ 1916ஸூ ஏப்ரல்மீ | இதழ் 4] |
|---|---|---|

## திருக்குறுந்தொகை.

அல்ல லென்செயு மருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொண்டன்று னென்செய்யும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே.

## தீவினையச்சம்.

தீவினையச்சமாவது பாவஞ்செய்ய அஞ்சுதலாம், பாவம் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் செய்யப்படும். மனத்தாற் செய்யப்படும் பாவங்கள் பொறாமை, வஞ்சகம், கோபம், பொச்சாப்பு (மறதி) செய்ந் நன்றிமறத்தல் முதலியனவாம். வாக்காற் செய்யப்படும் பாவங்கள் பொய், குறளை (கோள்), கடுஞ்சொல், பயனில் சொல் என்னும் நான்குமாம். காயத்தாற் செய்யப்படும் பாவங்கள் கொலை, புலை (மாமிசம்புசித்தல்), களவு, கள் முதலிய அறிவைமயக்கும் பொருள்களை யுண்ணுதல், வியபிசாரம், சூதாடல் முதலியனவாம்.

"தவமும் தவமுடையார்க் காகும்"

என்றபடி முற் சனனங்களில் புண்ணியஞ் செய்தவர்களுக்கே பிற் சனனங்களிலும் புண்ணியஞ் செய்தல்நேரிடும். இதுபற்றியே திருமூலநாயனுரும்

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ண லதுகண்டருள் புரியா நிற்கும்
எண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம னழுவுகின் றரே.

என்றருளிச்செய்தனர்.

முற்பிறவிகளிற் பாவஞ் செய்தவர்கள் இப்பிறவியிலும் பாவஞ் செய்யப்பின்னிடார். ஆதலால் இப்பிறவியிற் புண்ணியஞ் செய்பவர்களை முற்பிறவியிலும் புண்ணியஞ்செய்தவர்களென்றும், இனிவரும் பிறவியிலும் புண்ணியஞ்செய்பவர்களென்றும் மதித்தல்வேண்டும். இப்பிறவியிற் பாவஞ்செய்பவர்களை முற்பிறவியிலும் பாவஞ்செய்தவர்களென்றும், இனிவரும் பிறவியிலும் பாவஞ்செய்பவர்களென்றும், இவர்கள் இவ்வாறே தொடர்ச்சியாகத் தீவினைகளைச் செய்பவர்களென்றும் எண்ணல்வேண்டும். இவர்களுக்கு உயிர்க்கு உறுதி பயப்பவைகளை எவ்வளவுதான் எடுத்துப்போதித்தாலும் அவை செவியில் ஏறா. இவர்களுக்குப் பெரியோரிணக்கமும், உண்மை ஞான நூல்களும், புண்ணிய சரித்திரங்களும், சிவபத்தி சிவனடியார்பத்தி முதலியனவும் அருவருப்பாயிருக்கும்.

## திருக்குறுந்தொகை.

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய வாயிர மாரண மோதிலும்
பொறி யிலீர்மன மென்கொல் புகாததே.

ஆளாகா ராளானா ரையடைந் துய்யார்
மீளா வாட்செய்து மெய்ம்மையு ணிற்கிலார்
தோளா தசுரை யோதோழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே.

இறைவனாராணையால் நல்வினை செய்பவர்களுக்கு இன்பமும், தீவினைசெய்பவர்களுக்குத் துன்பமும் உண்டாதல் தப்பாது என்பதை மனிதர் யாவரும் உணர்ந்திருந்தும், மிகச்சிலரே தீவினைகளை நீக்கி நல்வினைகளைச்செய்து உய்யுநெறி கடைப்பிடிப்பர். மற்றவர்களெல்லாம், கள்ளுண்டலால் அறிவுமயங்கி, பொருளுமிழந்து, அவமானமுண்டாதலை அனுபவவாயிலாயுணர்ந்தும், மீண்டு மீண்டும், அதைக்குடித்து மயங்கிக் கிடப்பார்போல், மண், பெண், பொன் என்னும் மூவாசையால் மதி மயங்கி, அம்மயக்கத்தையே இன்பமாகக்கொண்டு, அவ்வாசைகாரணமாகத் தீவினைகளைச்செய்து ஓயாது பிறந்து பிறந்துழல்வார்கள். இதனாலேயே அளவுபடாத ஆன்மாக்கள் சிவபெருமான் என்று உண்டோ அன்றே உள்ளனவாயிருந்தும் இது வரையில் முத்தியடையாமல் இன்னும் பிறந்து பிறந்துழல்கின்றன. இவ்வாறு நல்வினையினால் இன்பமும் தீவினையினால் துன்பமும் உண்டாதலையுணர்ந்தும் இறைவனார் திருவடிப் பற்றைப் பற்றாது உலகப்பற்றையே பற்றித் தீவினைகளைச்செய்து பிறவிக்

கடலில்வீழ்ந்து துயருறும் ஆன்மாக்களுக்காக இரங்கியே "கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளுந் திருஞான சம்பந்தர்" •

"அவ்வினைக்கிவ்வினையாமென்று சொல்லுமஃதறிவீர், உய்வினை நாடாதிருப்பது முந்தமக் கூனமன்றே, கைவினை செய்தெம்பிரான் கழல் போற்றுது நாமடியோம், செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறு திருநீலகண்டம்" என்றருளிச்செய்தனர்.

பெரும்பாலும் நல்வினைசெய்தல் அரியதும் தீவினைசெய்தல் எளியதுமாம். ஆயினும், பெரியோர்கள் எவ்வளவு பாடுபட்டாயினும் செயற்கரிய நல்வினைகளைச்செய்வர். உயிர்துறக்கவரினும் செயற்கெளிய தீவினைகளைச்செய்ய அஞ்சி நடுங்குவார். சிறியோர் நல்வினைகளைச்செய்தல் அரிதென்று பயந்து செய்யாதொழிவர். எளிதென்று இன்பம் நுகர்வார்போல் தீவினைகளைச்செய்து நிரயத் துன்பமும் பிறவித் துன்பமும் அடைவார்கள்.

## தாயுமானசுவாமிகள் பாடல்.

மரவுரி யுடுத்துமலை வனநேற் கோறித்துமுதிர்
வனசருகு வாயில் வந்தால்
வன்பசி தவிர்த்துமனல் வெயிலாதி மழையால்
வருந்தியும் மூல வனலைச்
சிரமள வெழுப்பியு நீரினிடை மூழ்கியுந்
தேகநம தல்ல வென்று
சிற்சுக வபேக்ஷையாய் நின்னன்பர் யோகஞ்
செலுத்திறு ரியாம் பாவியேம்
விரவுமறு சுவையினொடு வேண்டுவே புசித்தரையில்
வேண்டுவே வெலாமு டுத்தி
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொரு வருத்த மின்றி
யிரவுபக லேழையர்கள் சையோக மாயினோ
மெப்படி பிழைப்ப துரையா
யிகபரமி ரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.

நாம்பாசவசப்பட்டவர்களாயிருத்தலினால் தீவினைகளை முற்றிலும் ஒழித்து நல்வினைகளையே செய்யவல்லவர்களல்லேம். ஆனாலும், நாம் அவ்-

வாறிருக்கும் நம்முடைய நிலைமைக்கு ஏங்கி, அறவாழி யந்தணரும், அநாதிமலமுத்தரும், வினைக்கேடருமாகிய இறைவனாருடைய திருவடிகளிடத்தில் நிறைந்த அன்புவைத்து அவர்பணிசெய்து கிடப்பேர்மானால் பாவம் நம்மை யணுகாது. இயமனுக்கும் நம்மிடத்தில் வேலையில்லை.

## தேவாரம்.

கற்றுங்கெரி யோம்பிக் கலியைவா ராமே
செற்றார்வாழ் தில்லைச் சிற்றம்பல மேய
முற்றுவெண் டிங்கண் முதல்வன் பாதமே
பற்றுநின் றாரைப் பற்று பாவமே.

## காலபாராயணம் (தேவாரம்.)

இறையேன் சோன்மற வேனமன் றாதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்றமர்
நறவ நாறிய நன்னறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே.

உலகத்தில் தீவினைசெய்வார் சிலர் செல்வராய் வாழ்தலையும், நல்வினைசெய்வார் சிலர் தரித்திரராய் வருந்துதலையும் பார்த்துச் சிலர் நல்வினை தீவினைகளாற் புண்ணியபாவங்களும் இன்ப துன்பங்களும் உண்டாகின்றன என்பது வெறும் பொய் என்று சொல்லி அஞ்சாமல் தீவினைகளைச் செய்கின்றார்கள். உயிர்களைப்பற்றிநின்ற கன்மம் என்னும் மலத்தின் இலக்கணத்தை அறியாதவர்களே இவ்வாறுசொல்லி இடர்ப்படுவர். கன்மம் என்னும் மலமானது அநாதியாகவே ஆன்மாக்களோடு விரவியிருக்கின்றது. அது பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம், என மூவகைப்படும். இவற்றுள் பிராரத்துவம்முற்பிறவிகளிற் செய்தவினைகள். ஆகாமியம் இப்பிறவியிற் செய்பவை. சஞ்சிதம் முற்பிறவிகளிற் செய்து இனிவரும் பிறவியில் அனுபவிக்கவேண்டி எஞ்சிநிற்பவை. (இவைகளின் இலக்கணத்தை இப்பத்திரிகையின் முதன்மலர் எட்டாம் இதழிற் காண்க.) உயிர்களின் பிராரத்துவம் ஆகாமியங்களுக்கேற்றவாறு இன்பதுன்பங்களுண்டாகின்றன. ஆயின் கடவுள் அவரவர்கள் எவ்வெப்பிறவிகளிலே எவ்வெவ்வினைகளைச் செய்கின்றார்களோ, அவ்வப்பிறவிகளிலேயே அவ்வவ் வினைப்பயன்களை உண்பித்துத் தொலைத்துவிடலாகாதோவெனில், கடவுளும் அவரவர்களைப் பற்றிநின்ற கன்மவேறுபாடுகளுக்கிணங்க வினைப்பயன்களை யுண்பிப்பதே அவருடைய அருட்டிறமாகும். எவ்வெவ்வுயிர்களை யெவ்வெவ்விதமாக ஆட்கொள்ளவேண்டுமென்பது பேரருளும் பேரறிவும் உடைய அவருக்கே தெரியும். அவர்

தீவினைக்கஞ்சித் தம்மைச் சரணமடைந்த அன்பர்களின் வினைகளை இப் பிறவியிலேயே தொலைத்துத் தமது திருவடி நீழலிற் சேர்த்தலும் உண்டு.*

## நீதிநெறிவிளக்கம்.

தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றேறுக்கும்—தெய்வ
மிலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்.

## பதிபசுபாசவிளக்கம்.

சஞ்சிதந் திருநோக் காற்போம் பிராரத்தந் தனுவோ டேகும்
விஞ்சுமா காமியந்தான் விளங்குஞா னத்தினுற் போம்
சேஞ்சயான் செய்த தெல்லாஞ் சிவன்செய்த தென்றுணர்ந்தால்
மஞ்சனே வினைத்திறங்கள் வந்துனைச் சந்தி யாவே.

சிலர் புண்ணியங்களைச்செய்தால் அதனுல் தாங்கள் செய்யும் தீவினைகள் அடிப்பட்டுப்போம் என்றெண்ணிக்கொண்டு புண்ணியச்செயல்களோடு பாவச்செயல்களுஞ் செய்கின்றூர்கள். இவர்கள் பிறரைவஞ்சித்துப் பொருள் சம்பாதித்துத் தருமங்களுஞ் செய்கிறூர்கள். வியபிசாரம் புலை கொலை மதுபானம் முதலிய தீயவொழுக்கங்களை மேற்கொண்டு சைவப்பிரசாரகர்களெனவும் சந்நியாசிகளெனவும் ஞானசாரியர்களெனவும் புண்ணியவான்களைப்போல் வெளிவருகிறூர்கள். இவர்கள்செய்யும் செயல்கள் அறச்செயல்களாகக் காணப்பட்டாலும் அவை வஞ்சவொழுக்கங்களென மதிக்கப்படும்.

சிலர் ஒருவன்செய்யும் நல்வினையின் அளவும் தீவினையின் அளவும் சமமாயிருந்தால் அவ்விரண்டும் அடிப்பட்டுப்போய் முத்தியுண்டாகும் எனவும், இவ்வாறு இருவினைகளின் அளவும் ஒத்திருத்தலே இருவினையொப்பு எனவும் மயங்கிக் கூறுவர். இருவினையொப்பாவது நல்வினைப் பயனுகிய இன்பத்தில் விருப்பும் தீவினைப்பயனுகிய துன்பத்தில் வெறுப்புமின்றி இன்பதுன்பங்களிரண்டையும் சிவனருளிச்செய்ததென்று சமமாக எண்ணி அனுபவித்தலாம். இவ்விருவினையொப்புச் சிவபத்தியாலும், சிவபத்தி புண்ணியமேலீட்டாலும் உண்டாகும். இவ்வுண்மையை உணரப்பெறுத கிறிஸ்தவர்முதலாயினேர், ஒருவன் இப்பிறவியில் நூறு புண்ணியமும் நூற்றெருபாவமும் செய்தால், அவன் ஒருபாவம் அதிகமாய்ச் செய்துவிட்டதற்காக மீளா நரகத்தில் வீழ்வானென்றும், ஒருவன் நூறு பாவமும் நூற்றெரு புண்ணியமுஞ் செய்தால் நித்தியசுகமாகிய மோட்சத்தைப் பெறுவான் என்றும் கூறுவர்.

சிலர் நான் என்பதும், நீ என்பதும், அவன் அவள் என்பனவும் நான் செய்தேன் நீ செய்தாய் பிறர் செய்தார் என்பனவும் வெறும் மித்தை யென்று ஞானங்களைப்பேசிக்கொண்டு அஞ்சாமல் தீவினைகளைச் செய்கின்றார்கள். இவர்கள் உண்மை ஞானநூல்களை உணர்ந்த பெரியோரிடம் ஆராய்ச்சிசெய்யாமல் பிஞ்சிலேயே பழுத்தழுகும் போலி ஞானிகளாதலால் இவர்களுக்கும் இவர்களுடைய உபதேசத்தைக்கேட்டு அவ்வாறு ஒழுகுவார்க்கும் நிரயமுண்டாதல் தப்பாது, தப்பாது.

சிலர், எல்லாம் சிவன்செயல், நமக்கென யாதொரு செயலுமில்லை, எதையும் அவர் செய்விக்க நாம் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு தீவினைகளை அஞ்சாமற்செய்கின்றார்கள். எல்லாம் சிவன்செயல் என்பதும், எதையும் அவர் செய்விக்க நாம் செய்கிறோமென்பதும் உண்மையே. தாயுமானசுவாமிகளும் "எல்லாமுனடிமையே எல்லாமுனுடைமையே எல்லாமுனுடையசெயலே" என்றருளிச்செய்தனர். தமிழ்வேதமும்

ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே
  யடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே
  உருகுவித்தா லாரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே
  பணிவித்தா லாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
  காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே.

என்றருளிச்செய்தது. ஆனால் தாயுமானசுவாமிகள் முதலிய பெரியோர்கள் தாங்கள் சொல்லியவண்ணமே ஒழுகினார்கள். எல்லாம் சிவன்செயல் என்றுணர்ந்து தீவினையைக் கனவிலும் நினையாதவர்களாயிருந்தார்கள். எல்லாம் சிவமயமாகவும் எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகவும் இலங்குமுயிருடலனைத்தும் ஈசன் கோயிலாகவும் கண்டு, நிராசை அன்பு அருள் பொறை ஞானம் ஆகிய இவைகளின் மயமாய் விளங்கினார்கள். இன்பதுன்பங்களிரண்டையும் ஈசனருளாகக் கண்டு அனுபவித்தார்கள். அத்தகைய ஞானவொழுக்கம் ஒருசிறிதுமின்றி ஆசைவசப்பட்டுத் தீவினைகளைச்செய்து, துன்பம் வந்தபோது துயரத்தில் மூழ்கியும், இன்பம் வந்தபோது இன்பத்திலழுந்தியும், மலத்தையுண்டு சேற்றிற்புரண்டு மகிழும் பன்றிகளைப்போல் உலகவாழ்க்கையிலுழன்றுகிடக்கும் எம்போலியர்கள் சிவன்செயல் என்று தீவினைகளைச்செய்தால் அத்தீவினைகள் எங்ஙனம் சிவன்செயலாகும்! இவர்கள் உண்மையாய்ச் சிவன்செயலாலே யாதும் வருமெனத்தேறாமல் ஆசைவசப்பட்டுத் தீவினைசெய்யும் பாவிகளாதலினால் இவர்களுக்கும் நிரயத்துன்பமே உண்டாகும்.

## ஸ்ரீதாயுமானசுவாமிகள்பாடல்.

• சிவன்செய லாலே யாதும் வருமெனத் தேறே னூழு
மவந்தரு நினைவை யெல்லா மகற்றிலே னுசை வெள்ளங்
கவர்ந்துகொண் டிழுப்ப வந்தக் கட்டிலே யகப்பட் டையோ
பவந்தனை யீட்டி யீட்டிப் பதைக்கின்றேன் பாவி யேனே.

*ஆன்மாக்களுக்கு "நான்" என்னும் அறிவு உண்டு. இது அநாதியாக வே ஆணவ மலத்தால் உண்டாயிருக்கும் அஞ்ஞான உணர்ச்சியாம். இது தற்போதம் என்றும் சொல்லப்படும். தற்போதமானது ஞானசாரிய ரது திருநோக்காலன்றி வேறெவ்வழியாலும் நீங்காது. ஆதலால் தற் போதம் உள்ளவரையில் ஆன்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைகள்யா வும் ஆன்மாக்களின் செயல்களேயாய்த் தத்தம்பயன்களாகிய இன்ப துன்பங்களை அவைகளுக்கு உண்பியாமற் கழியமாட்டா.*

## பண்டாரமும்மணிக்கோவை.

என்செய லாவோன் றும் யான்செய்த தில்லை யெனக்கவமே
புன்செய லாம்வினைப் போகமுண் டாவதென் போதமில்லேன்
றன்செய லாயவெல் லாமாசி லாமணிச் சம்பந்தநின்
னன்செய லாயினு மென்செய லாச்செய்யு நானேன்பதே.

*சிலர், யாதேனும் ஒரு தீவினையைச்செய்பவன் அதைப் பாவ மென்று அறிந்து செய்தால் மாத்திரம் அது பாவமாகும் எனவும் அதைப்பாவம் என்று அறியாமற் செய்கிறவன் மனம் பரிசுத்தமாயிருக் கிறதென்றும், அதனால் அவனுக்குப் பாவம் உண்டாகாது என்றும் நினைக்கிறார்கள். நெருப்பைத் தெரிந்து தீண்டினாலும் தெரியாமல் தீண் டினாலும் அது சுடாமல் விடாது. அதுபோலத் தீவினையைப் பாவம் என்று தெரிந்துசெய்தாலும் தெரியாமற்செய்தாலும் அது பாவம், பாவ மே. அதனாலே துன்பம் உண்டாவது திண்ணம், திண்ணமே. ஓரறிவு யிர்களுக்கும் ஆகாமிய வினையேறுமென்பது ஞானநூல்களாலும் சரித்தி ரங்களாலும் அறியக்கிடக்கின்றது. உமாபதிசிவாசாரியசுவாமிகளின் திருமடத்தில் முளைத்த புண்ணியம்வாய்ந்த ஒரு முள்ளிச்செடிதானும் மலபரிபாகம்பெற்று முத்தியடைந்த சரித்திரத்தாலும் இது நன்குவிளங் கும். ஆதலால் மனிதர்கள் பாவம் என்று அறியாமற்செய்வதனாலேயே பாவம் பாவமாகாமற்போகாது. மனிதப்பிறவியெடுத்துப் புண்ணியபா வங்களைக் கல்லாமையும் ஒரு பாவமாம். இதுபற்றியே "கற்றிலேன் கலைகள் பலஞானம் கடியவாயின கொடுமைகள்செய்தேன்" எனவும் "கல்லார்நெஞ்சில் நில்லானீசன்" எனவும் தமிழ்மறையருளிச்செய்தது.*

மனமானது ஐம்புலனடக்கல், அவாவின்மை, வாய்மை, பொறை, அருள், அன்பு ஆசாரம் முதலிய உயர்குணங்களாற் பரிசுத்தமடையும். கொலை புலை முதலிய தீய குணங்களால் அசுத்தமடையும். இவ்வாறிருக்கப் பாவம் என்று தெரியாமையால் அருள்ஆசாரம்முதலிய குணங்களின்றிக் கொலைமுதலிய குணங்களையுடையவன்மனம் எவ்வாறுபரிசுத்தமாயிருக்கும். வேறுசிலர், ஞானிகள் எத்தொழிலைச்செய்தாலும் செய்வார்களென்றும், அதனால் அவர்களுக்குப்பாவம் நேரிடாது என்றும் சொல்லி, சில ஞானிகள் மதுமாமிசம் விற்றதாகவும் உண்டதாகவும் கட்டுக்கதைகளைச் சொல்லுகிறார்கள். இக்கதைகள் சுருதியுத்தியனுபவங்களுக்குமாறாகத் தீய வொழுக்கமுடையார் பிறர் தங்களை ஞானிகளென மதித்தற்குக் கட்டிக்கூறும் பொய்க்கதைகளாம். பலர் இக்கதைகளைப்படித்துக் கஞ்சா அபின் மதுமாமிச முதலியனவுண்டு மயங்கிக் கிடப்பவர்களையெல்லாம் ஞானிகளென்றுநம்பி, அவர்களுக்கு இறைச்சி சாராயம் முதலியவற்றை அவர்கள் விரும்பியவாறெல்லாம் கொடுத்து உண்பித்துப் பூசிக்கிறார்கள். இவ்வாறு செய்வது பெருங்கொடும்பாவமாம். ஆனால் சித்தாந்த ஞானநூல்கள், ஞானிகள் பாலர் பேயர் பிசாசர்போலிருப்பரெனவும், அவர்கள் எங்கிலையிலிருந்தாலும் இருப்பரெனவுங் கூறுகின்றனவே அவை கூறுவது பொய்யோவெனில், சித்தாந்த ஞானநூல்கள் அவ்வாறு கூறுவது உண்மையே என்க. சிவஞான சித்தியாரிலும்,

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
  நன்மையொடு தீமையிலை நாடவே தோன்றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
  செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமில்லை புலனில்லை கரண மில்லை
  குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பசாசர் குணமருவிப்
  பாடலினொ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்.

நாடகளிற் புக்குழன்றுங் காடகளிற் சரித்து
  நாகமுழை புக்கிருந்துந் தாகமுத றவிர்த்து
நீடுபல காலங்க ணித்தரா யிருந்து
  நின்மலஞா னத்தையிலார் நிகழ்ந்திடுவர் பிறப்பி
னேடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
  யெறிவிழியின் படுகடைக்கே கிடந்துமிறை ஞானங்
கூடுமேவர் கூடரிய வீடுங் கூடிக்
  குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்.

என அருளிச்செய்யப்பட்டது.

(இன்னும்வரும்.)

## விவாகவிதி.

விவாகம் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் காந்தர்வம் அசுரம் இராக்கதம் பைசாசம் என எட்டுவகைப்படும்.

இவற்றுள் முக்கியமாய் இப்போது நடந்துவருகிற விவாகம் பிரசாபத்தியம். அதாவது மணமகனுக்குரியவர்களும் மணமகளுக்குரியவர்களும் கலந்துபேசி, குலம் கோத்திரம் கொள்வன கொடுப்பன முதலியன விசாரித்துப் பொருத்த நிமித்தம் பார்த்துப் பெண்ணை நல்ல சுப முகூர்த்தத்தில் இஷ்ட பந்து ஜன சகிதமாக விநாயகர் அஷ்டதிக்குப்பாலகர் முதலிய தேவர்கள் முன் தத்தஞ் செய்துகொடுப்பது.

அஷ்டதிக்குப்பாலகர்.—நான்கு வேதங்களுக்குப் பிரதியாக நான்கு கால்கள் அமைக்கப்பட்ட விவாகமண்டபத்தில், பக்கத்துக்கு 24 சிற்பி அங்குலமாக 96 தத்துவமும் 96 அங்குலமாகவுள்ள மணவறைப் பந்தலின் தத்துவச்சதுக்கத்திற்குக் கிழக்கில், ஆயிரங்கண்ணுள்ள தேவேந்திரனுக்குப் பிரதியாக அனேக முக முள்ள கிளைவிளக்கையும், தென் கிழ்த்திசையில் அக்கினி தேவனுக்குப் பிரதியாகக் குடவிளக்கையும், தென்திசையில் இயம தருமராஜனுக்குப் பிரதியாகத் தர்ம கர்ம பாவபுண்ணியப் பகுப்புக்குரிய புரோகிதரையும், தென்மேற்றிசையில் நிருதி தேவனுக்குப் பிரதியாகத் தோழிப்பெண்ணையும், மேற்குத்திசையில் வருணதேவனுக்குப் பிரதியாக மணமகளையும், வடமேற்கில் வாயு தேவனுக்குப் பிரதியாகச் சிவிறிகொண்டு வீசும் மாப்பிள்ளைத்தோழனையும், வடதிசையில் குபேரனுக்குப் பிரதியாக பணப்பையைக் கையிற்றாங்கி பூரிகொடுக்கும் விவாக கர்த்தாவையும், வடகிழக்கு மூலையில் ஈசானமூர்த்திக்குப் பிரதியாக அம்மியையும் குழவியையும், ஆக அஷ்டதிக்கிலும் அஷ்டதிக்குப்பாலகரையும் அவ்வவர்க்குரிய மந்திரத்தால் ஆவாகனஞ்செய்து, சந்த ஞட்சதை புஷ்பஞ்சாத்தி எடுத்தகாரியம் குறைவின்றி நிறைவேறும்படிச் சங்கல்பஞ் செய்துகொள்ளவும்.

நவக்கிரகங்கள்.—அஷ்டதிக்குப்பாலகரில் ஈசானமூர்த்தியாக அமைக்கப்பட்ட அம்மி குழவிகளுக்குத் தென்பாரிசத்தில் பச்சமுதைப் பரப்பி ஒன்பது வீடாகக்கீறி, நவக்கிரகங்களுக்குப் பிரதியாக முளை கட்டியிருக்கும் நவதானியங்களைப் பாலிகையிலிட்டு அந்தந்த ஸ்தானத்தில் அமைத்து, அவரவர்க்குரிய மந்திரத்தினல் ஆவாகனஞ்செய்து

* இது ஸ்ரீமத் ஏகாம்பரசிவயோகிகளின் மாணக்கர் வைதிகசைவசித்தாந்தப் பிரசங்கரத்நாகரம், ஸ்ரீமான், கா. ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள் வெளியிட்டு வந்த "ஞானபாநு" என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்து அச்சிடப்பட்டது.

தருப்பையினுலாவது முப்புரி நூலினுலாவது பட்டுமுதலியவஸ்திரத்தினுலாவது பந்தித்துத் தூபதீப நைவேத்தியங்காட்டிச் சிந்தித்துச் சங்கல்பம் பண்ணிக்கொள்ளவும்.

சப்த ரிஷிகள்.—நவக்கிரக பாலிகைகளுக்கும் அக்கினிதேவனுக்கும் பிரதியாக அமைக்கப்பட்ட குடவிளக்குக்கும் நடுவில் சப்தரிஷிகளுக்குப் பிரதியாக ஏழுகரகங்களுக்கு நூல் சுற்றி அவைகளில் ஜலம் பூரித்துவைத்து அவ்வவர் மந்திரத்தால் ஆவாகனஞ்செய்து கந்த புஷ்பாக்ஷதைகள் சாத்தி தூபதீப நைவேத்தியங்கொடுத்துச் சங்கல்பம் பண்ணிக்கொள்ளவும்.

சப்த தீர்த்தம்.—தேவேந்திரனுக்குப் பிரதியாக அமைக்கப்பட்ட கிளைவிளக்குக்கு முன் மணலைப்பரப்பி அதில் ஒரு குடத்தைவைத்து, அதில் கங்கை யமுனை சரஸ்வதி நர்மதா காவிரி கன்னியாகுமரி கோதாவிரி ஆகிய சப்ததீர்த்தங்களுக்குப் பிரதியாக, தேவாலயம் நந்தவனம் நதி முதலிய தீர்த்தங்களில் ஏதாவது அந்தந்த தீர்த்தங்களுக்குள்ள மந்திரங்களைச்சொல்லி அக்குடத்தில் விடுத்து ஆவாகனஞ்செய்து, விபூதி சந்தனுட்சதை குங்குமம் தரித்து, தூபதீப நைவேத்தியங்காட்டி, ஒரு காகத்தை அதன்மேல் மூடிவைத்துச் சங்கல்பம் பண்ணிக்கொள்ளவும்.

திரிமூர்த்தி சொரூபம்.— பிரமசொரூபமாகிய அரசின் கிளைக்குத் தேன் முதலியவற்றுல் நீராட்டிவைத்துச் சந்தனபுஷ்பாக்ஷதை சாத்தி, வெண்பட்டு அல்லது வெண்ணூல் தரிக்கவும். விஷ்ணுசொரூபமாகிய ஆலிற்குச் சுத்தோதகம் கஸ்தூரி பனிநீர் வெட்டிவேர் வாசங்களினுல் திருமஞ்சனமாட்டி நீலம் அல்லது மஞ்சள் வஸ்திரமாவது நூலாவது தரித்து துளசி துளசிமணி சாத்தவும். உருத்திர சொரூபமாகிய கலியாண முருக்குக்குச் சந்தனுதியபிஷேகஞ்செய்து திருநீறணிந்து கந்த புஷ்பாக்ஷதைகள் சாத்தி ருத்திராக்ஷம் வில்வம் புஷ்பமாலை யணியவும். இவ்வாறு பிரமன் விஷ்ணு உருத்திரன் ஆகிய மூவரையும் முறையே அரசு ஆல் கலியாணமுருக்கு மூன்றிலும் அவ்வவர் மந்திரத்தால் ஆவாகனஞ்செய்து கிளைவிளக்குக்கும் சப்ததீர்த்தம் விட்டிருக்கும் குடத்திற்கும் நடுவில் 12 அங்குலம் பள்ளந்தோண்டி, அதில் நீர் பால் தேன்விட்டு, நவரத்தினம் பொன் வெள்ளி தாம்பிரம் நவதானியம் ஆகிய இவற்றுள் ஏதாவதுபோட்டு, மூன்று முதிர்ந்த வயதுள்ள சுமங்கிலிகளைச் சரஸ்வதி இலக்குமி பார்வதியாகப் பாவித்து, அவர்களுக்குச் சந்தனம் புஷ்பம் அக்ஷதை கொடுத்து, அவர்களால் மும்மூர்த்திசொரூபமாகிய அரசாணிக்காலை அப்பள்ளத்தில் விடுத்துப் பூவாரம் பொன்னுரம் முத்தாரம் பூட்

டித் தூபதீப நைவேத்தியங்கொடுத்து அப்பள்ளத்தை நெல்லினால்மூடி, நீர் பால் தேன்விட்டுப் பணிந்து சங்கற்பம் பண்ணிக்கொள்ளவும்.

ஓமம்.—மங்கலிய ஸ்திரீகளால் கொண்டுவரப்பட்ட அக்கினியை அரணிமதித்த அக்கினியாகப்பாவித்து அக்கினிதேவனுடைய மந்திரத்தினால் அதை விருத்திசெய்து சகல உபசாரத்துடன் பூசித்து அர்க்கியங் கொடுத்துத் தொழுது சங்கற்பித்துக்கொள்ளவும்.

கங்கணம்.—தொடங்கிய காரியம் முடிவாகிற வரையில் பயபக்தியாகவிருந்து நடத்துவதற்காகக் கணுவில்லாத மூனமஞ்சளுக்குக் கன்னிகை யிழைத்தநூலால் நவக்கிரக மந்திரஞ்சொல்லி ஒன்பதுமுடி போடப்பட்ட கங்கணத்தை மணமகனும் மணமகளும் கட்டிக்கொள்ள வேண்டும்.

மாங்கல்யம்.—ஆன்மதத்துவம் இருபத்தினாலென்ன, 24 இழையாகக் கன்னியரிழைத்தநூலே முறுக்கில்லாமல் * திருவடிக்குறிப்பாகிய மாங்கலியத்திலேற்றி, அதைத் தேங்காயிற்சுற்றி, முத்து இரத்தினம் அல்லது பச்சரிசி பரப்பிய தட்டில்வைத்து, மஞ்சள் குங்குமம் புஷ்பம் அக்ஷதைகளாற் பூசித்து, தூபதீப நைவேத்தியங் கொடுக்கவேண்டும்.

வேத மந்திரோச்சாரணையோடு வேதியர் பெரியோர் நல்லோர் பந்துக்கள் மித்திரர்கள் முதலியோரால் ஆசீர்வதிக்கப்பட்ட அத்திரு மாங்கல்யத்தை மணமகன், சங்கங்கள் ஓமெனும் பிரணவநாதத்தை யொலிக்க, மணமகள் கழுத்திற்சேர்த்துப் பிடரியில் பிரமமந்திரத்தினாலே முதல் முடியும், விஷ்ணுமந்திரத்தினாலே இரண்டாவது முடியும், உருத்திரமந்திரத்தினாலே மூன்றாவது முடியும், ஆக மூன்று முடியும் போட்டு, அம்முடியை இடதுகையிற் பற்றிக்கொண்டு இறைவரைத்துதித்து, வலதுகரத்தில் விபூதியெடுத்து அம்முடியின்மேல் வைத்து, துற்சோபம் துற்பயங்கரம் துர்மரணம் துர்வியாதி நீங்கவும், சகல பாபரோக நிவாரணமாகவும், சம்பத் சாதுசங்கம் உண்டாகவும், ஸ்ரீபஞ்சாட்சரத்தைச் செபித்துத் தன் நெற்றியில் விபூதி தரித்துக்கொண்டு பெண்ணின் நெற்றியிலும் விபூதிதரித்துப் பெண்ணின் செவியில் நூலோடு கூடிய இம் மாங்கல்யம் நம்முடைய சுகஜீவனத்துக்கு ஏது வாகும் என்னும் பொருளமைந்த (மாங்கல்யந்தந்து நாநேநா மமஜீவநஹேதுநா) என்னும் மந்திரத்தையுபதேசிக்கவேண்டும்.

---

* மாங்கல்யம் பாதம்போல் இருபிரிவினதாகவாவது, பாதமலர் போல வட்டமாகவாவது இருக்கும்.

பின்பு நாயகியை நாயகனிடப் பாகத்திலமர்த்தி முறையே மற்றச் சடங்குகளை விதிப்படி நடத்தி ஓமாக்கினிக்குப் பூரணாகுதிகொடுத்து நீராஞ்சனமாகிய ஆலஞ்சுற்ற வேண்டும்.

அப்பால் இருவரும் அஷ்டமங்கலத்துடன் அரசாணிக்காலை மூன்றுதரம் பிரதட்சணஞ் செய்யவேண்டியது.

அஷ்டமங்கலமாவது கைவிளக்கு, பூரணகும்பம், கண்ணாடி, அங்குசம், வெண்சாமரம், இணைக்கயல், கொடி, முரசு, ஆகிய எட்டுமாம். அவற்றிற்குப் பிரதியாகக் கைவிளக்கு சொம்பு கண்ணாடி முதலியவற்றைப் பெதும்பைப் பருவமுடைய பெண்கள் எடுத்துக்கொண்டு முன்னதாகச் சுற்றி வரவேண்டுமேயல்லாமல் ஆவாகனஞ்செய்யப்பட்டிருக்கிற நவக்கிரக பாலிகையைத் தொடப்படாது.

அவ்வாறு அரசாணி சுற்றிவரும்போது முதற்சுற்றில் அம்மி மிதித்தல், இரண்டாவது சுற்றில் அருந்ததி துதித்தல், மூன்றாவது சுற்றில் அனுபவவிதியையறிதல் ஆக மூன்று சுற்றிலும் மூன்றுகாரியஞ் செய்யவேண்டும். அதாவது முதற்சுற்றில் மணமகன் ஈசானமூர்த்திக்குப் பிரதியாகவைக்கப்பட்டிருக்கிற அம்மியையும் குழவியையும் மணமகளுக்குக்காட்டிப் பெண்ணே இவ்விரண்டையும் சிவசத்தி சொரூபமாக மதிப்பாயாக, இவ்விருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத அர்த்தநாரீஸ்வரசொரூபமாயமைந்தது இத்தன்மைத்து எனச் சொல்லி, இவர்களைப்போல நாமிருவரும் உடலும் உயிரும்போல் ஒரே மனதாய்ப் பிரியாத பிரியத்துடன் வாழ்ந்திருப்போமாக எனப்போதித்து, நீ யிப்போது என்னிடப்பாகமாயினை எனவும், இடப்பாகத்தில் தன் இடதுகைச் சிறுவிரலைப்பற்றிநிற்கும் மணமகளின் வலதுகாற் பெருவிரலைத் தன் இடதுகைப் பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் பற்றி நீ எப்போதும் எவ்விடத்தும் இப்பெருவிரல் திருஷ்டியாகவே நடக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தவேண்டுமேயன்றி ஈசானமூர்த்தியாய் ஆவாகனஞ்செய்யப்பட்ட அம்மியையும் குழவியையும் மிதிக்கப்படாது.

இரண்டாவது சுற்றில் வடதிசையை நோக்கி அருந்ததி யிருக்குமிடத்தைச் சுட்டிக்காட்டி அவ்வருந்ததியும் அவர் பர்த்தாவாகிய வசிஷ்டரும் நடந்துகொண்ட இல்லறவொழுக்கத்தின் சரித்திரந் தெரியச் சொல்லிப் பெண்ணே நீயும் அவ்வருந்ததியைப்போல் இல்லறவொழுக்கந் தவறாது என்னுடன் இருந்துவாழ்வாயாயின் அவ்வித உன்னதபதம் அடையக்கூடும் என அறிவுறுத்தித் தூபதீப நைவேத்தியங்களுடன் தொழுது வணங்கவேண்டும்.

---

அம்மிமிதித்தல், கற்புநிலைதவறிய பெண்கள் அகலிகையைப்போல் யாவராலும் மிதிக்கப்படும் கல்லாய்ப்பிறந்து துயருறுவர் என்பதை யறிவுறுத்தற்பொருட்டெனக் கூறுவாரும் உளர். (ப-ர்.)

மூன்றுவது சுற்றில் மணவறையில் வந்து நின்று தென்திசையில் இயமதருமராஜனுக்குப் பிரதியாகவைக்கப்பட்டிருக்கிற புரோகிதரைப் பூஜித்து வணங்கவேண்டும். அப்போது அவர் அவ்விருவருக்கும் ஆசி கூறி உலகவழக்கவிதிகளையும், பாவபுண்ணியப் பகுப்பையும், தேவதா பூஜை பிதுர்ப்பூஜை தருமதானம் முதலியவற்றின் பயனையும் இதிகாச புராணங்களால் எடுத்துக்காட்டிக் கற்புடைய மகளிரிலக்கணத்தையும் இல்லற வொழுக்கத்தையும் அதனலடையத்தக்க அறம்பொருளின்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களின் பயனையும் விரிவாயெடுத்துரைத்து அவர்கள் அவ்வண்ணம் நடந்தேறும்படி வாழ்த்தவேண்டும்.

மற்றச்சடங்குகளும் தானதருமபோஜனாதிகளும் முறையேநடந்து மூன்றுவேளை ஓமம் பண்ணி கங்கணவிசர்ஜனமானவுடன் முன்சொன்ன முறையே அந்தந்த தேவர்களை அவரோகண மந்திரங்களினல் அவ வரவர்கள் இருப்பிடஞ்சேர்த்துத் திரிமூர்த்திச் சொரூபமான அரசாணிக் காலே நந்தவனம் கோயிற்றோட்டம்முதலிய சுத்த ஸ்தானத்தில் தனித் தனி நாட்டிச் சாலியிலிருக்கின்ற சப்ததீர்த்த ஜலமும் சப்தரிஷிகளின் கலச ஜலமும் விட்டுப் பாதுகாத்து வந்தால் அவைகள் தளிர்விட்டுத் துளிர்த்துத் தழைத்துச் செழிக்கும்.

நம்முடைய விவாகச்சடங்குகளில் செல்வவானென்றும் ஏழைய ரென்றும் இல்லாமல் எல்லோருக்கும் விவாகப்பந்தல், மாங்கல்யம், கூறை வேட்டி, முதலியவை யொரேபடித்தாயிருப்பதால் கிரமப்படி விதியை யனுசரித்து மணஞ்செய்யும் மணமகனும் மணமகளும் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி முருக்கம் பூப்போல் சந்ததி விருத்தியாய் மூங்கில்போல் கிளைத்து நோயற்றுத் தீர்க்காயுள்பெற்று வாழ்வார்கள்.

---

## சிவரகசியம்-கலியுகதரும கதனம்.

இது ஸ்ரீ கைலாயத்தில், சிவபெருமானர் உமாதேவியாரை நோக்கித் திருவாய் மலர்ந்தருளியது.

ஹே தேவி! தோஷகரமாகிய கலியின் சொரூபத்தைச்சொல்லுகி றேன் கேட்பாயாக. ஸ்ரீ கைலாயத்தில் தருமவிருஷபமானது கலியில் ஒருபாதத்தில்நிற்கும். அக்கலியில் இவ்வுலகில் முஞ்சன், போஜன் முத லிய பதினறு சோழர்களும், பஸ்மருத்திராக்ஷதாரிகளாய் மகா பராக்கி ரமசாலிகளாய் சிவபக்த சிரேஷ்டர்களாய் சோழநாடெங்கும் சிவாலயப் பிரதிஷ்டைசெய்பவர்களா யிருப்பர். காவேரி நதியினற் சிறப்படைந்

தோங்கும் அச்சோழநாட்டிலுள்ளாரெல்லாந் தமிழ்ப்பாஷையில் வல்லவர்களாயிருப்பர். பாண்டிநாடாகிய மதுரையில் ஐந்நூறு பாண்டியர்கள் பிறப்பார்கள். அவர்களுள் மலயத்துவஜபாண்டியனுக்கு நீ மகளாய்ப் போவாய். அம்மதுரையில் மகாலிங்கமூர்த்தியாய் சுந்தரேசரென்னும் நாமத்தோடு நாமும், மீனாக்ஷியென்னும் நாமத்தோடு நீயுமிருந்து யாவருக்கும் அநுக்கிரகஞ்செய்து வருவோம். சோழபாண்டியர்களேயல்லாமல் சேரராஜாக்களுமுண்டாவார்கள். சேர சோழ பாண்டியநாடென்று அவர்கள் பெயரானே அவர்நாடுகள் வழங்கும். அந்நாட்டிலுள்ளவர்களெல்லாம் சிவபக்தர்களாகவே யிருப்பார்கள். இவர்களில் பாண்டியர்கள் கலிபிறந்து சிலகாலஞ்சென்றபின்னர் ஆயிரவருஷம் யாவரையும் சைவநெறியிற் பிறழவொட்டாமலும் தாங்களும் பிறழாமலும் அரசாக்ஷி புரிந்து வருவார்கள். பின்னர் ஆயிரவருஷம் பாண்டியர்களும் சோழர்களும் அரசாக்ஷிபுரியுங்கால் பலிஷ்டராகிய விக்ரமன், சாலிவாகனனென்பவர்களால் அபஜெயப்பட்டுச் சைவநெறியினும் வருணாச்சிரமநெறியினுந் தவறுதலுடையராயுஞ் சூத்திரசங்கரங்களுடையராயுங் காலங்கழித்துவருவார்கள். பின்னர் தெலுங்கர்களுள் ஆறுபேரும் அரசாக்ஷி செலுத்தவுண்டாவார்கள். அதன்பின்னர் ஆரியாவர்த்தத்திலும், காசியிலும், குருக்ஷேத்திரத்திலும் அவிவேகிகளாகிய துலுக்கர்கள் விசேஷமாயுண்டாவார்கள். ஐந்நூறு வருடத்துக்குமேல் பிராமணர்கள் தரித்திரர்களாகவும், அல்பபுத்தியுடையவர்களாகவும், அரசர்கள் சூத்திரர்களைக் கலந்தவர்களாகவும், திருடர்களுக்குச் சமானமானவர்களாகவும், அதர்மிஷ்டர்களாகவுமாவார்கள். ஏனையோரெல்லாம் துலுக்காசாரத்தையுடையவர்களாவார்கள்.

இனிச் சிவபக்தர்களுடைய அவதாரங்களைச் சொல்லுகிறேன். அசைவநெறியை உடையாரைத் தண்டித்துச் சிவமே பரம்பொருளென்றுணர்த்தும் சைவநெறி முன்போலெங்குந் தழைத்தோங்க அரதத்தனென்னும் ஓர் சாம்பவனும், சாந்தோக்ய வம்சோத்பவனும், என்னுடைய அம்சபூதனும், பிராம்மணசிரேஷ்டனும், ஆசாரநிஷ்டனும், சோமயாஜியும், என்னுடைய சிறந்தபக்தனுமான அப்பையதீக்ஷிதனென்னும் ஓர்சாம்பவனும் அவதரித்துச் சேரசோழபாண்டிய நாடுகளில் மறைந்துபோயிருக்கும் சிவபாரம்யமான சைவசாஸ்திரங்களைப் பிரகாசப்படுத்துவர். பின்வரும் பக்தகோடிகளும் அந்தச் சைவசாஸ்திரங்களைக் கொண்டு சிவப்பிரகாசராய் அந்தச் சாஸ்திரங்களை விர்த்திசெய்துவருவார்கள்.

இங்ஙனங் கூறிவந்த இவர்களுக்கெல்லாந் தலைமையாயுள்ள அறுபத்துமூவரென்னும் எண்படைத்து என்னுடைய பத்திமார்க்கத்தை வெ

ளிப்படுத்தும் பக்தர்கள் பலசாதிகளிலும் அவதரித்துப் "பக்தி" என்பது இவ்வளவினையுடைய தென்பது யாவருமறிய அதற்குப் பிரமாணமாயிருப்பார்கள். அவர்களில் ஸ்ரீ ஞானசம்பந்தனென்றும், வாகீசனென்றும், சுந்தரமூர்த்தியென்றும், பெயருள்ள மூவரும் எனக்கு முக்கியமானவர்கள். அவர்களுடைய சரித்திரங்களைப் பின்னால் கூறுகின்றேன்.

அகஸ்தியனென்கிற முனியும், அம்முனிபுங்கவனைப்போன்ற சைவருஷிகளும் தபோபலத்தினால் சிவபக்தர்களாய் மகிமையோடு விளங்குவார்கள். ஹே தேவி! அப்பெரியோர்கள் காவேரிதீர்த்தத்திலுள்ள லிங்கமூர்த்திகளுடைய அற்புதமாகிய மகிமையை அகஸ்தியபகவானாலுண்டாக்கப்பட்ட திராவிடபாஷையினால் தோத்திரஞ்செய்வார்கள். அந்தத் திராவிடஸ்தோத்திரம் எனக்கு மிகவும் பிரீதிகரமாயிருக்கும். இவர்கள் செய்தி யிங்ஙனமிருக்க, இப்பூமண்டலத்தில் சோரவம்சத்திற் சனிக்கும் பாபிஷ்டர்களாகிய அரசர்கள் பிராமணத்துரோகிகளாயும், சிவாலயங்களைக் கெடுக்கின்றவர்களாயும், பஸ்மருத்திராக்ஷதாரணம் சிவலிங்கார்ச்சன முதலியவைக ளில்லாதவர்களாயும், தமோகுண நிஷ்டர்களாயும், என்னைத்தெரிந்துகொள்ளும் சிவஞானமில்லாதவர்களாயும், சிஷ்டாசாரமிருக்கின்றவர்போற்காட்டி துஷ்டாசாரத்திலே நிஷ்டர்களாயும், சிவநிந்தைசெய்வதிலும், சிவலிங்கார்ச்சனை செய்யாமலிருப்பதிலுஞ் சந்துஷ்டர்களாயுமுள்ள சிலதுஷ்டர்களுண்டாவார்கள். இந்தத் துஷ்டர்களேயன்றிச் சக்கிராங்கிதஞ் செய்துகொள்ளுகின்றவர்களாயும், நெற்றியில் ஊர்த்துவ புண்டரமுள்ளவர்களாயுஞ் சிலரிருப்பார்கள். சிலர் தர்மிஷ்டர்களாயிருந்தும் நெறியில்லாதவர்களாயும், நெறியில்லாதிருந்தும் சிவபூஜை நடத்துகின்றவர்களாயும், வேதாந்த விசாரமுடையவர்களாயும், சத்திபூஜை குருபூஜை முதலியவைகளில் ஆசக்தியுள்ளவர்களாயுமிருப்பார்கள். அவ்வாறிருந்தபோதிலும் வீடுகடோறும் போஜனஞ்செய்யவேண்டுமென்னும் பிரியமுள்ளவர்களாகப் பித்துப்பிடித்தவர்போலுலாவித்திரியுஞ் சிலபிராமணர்களும் சிஷ்டாசாரத்திற் பிரியமுள்ளவர்களைக் கெடுக்கின்ற துற்புத்தியும், அற்பமாகிய மிலேச்சாசாரத்திற் பிரியமும், சத்தியமார்க்கத்தில் அப்பிரமாணியமும், அசத்தியமார்க்கத்தில் பாஷண்டத்வமுமுடைய அநேகவரசர்களுமுண்டாவார்கள். இவர்களேயன்றி ரக்தவர்ணமான முகமுடையவர்களாயும், நீலவர்ணமான பலவாபரணங்களைத் தரித்தவர்களாயும், வாத்தியமென்றெண்ணத்தக்க கண்டத்தொனி யுடையவர்களாயும் கற்களைக் கையிலேந்தியிருப்பவர்களாயும், தேவர்களையுஞ் செயிக்கத்தக்க சரீரபலமுடையவர்களாயுமுள்ள ஊணசாதியருண்டாவார்கள். வனையரெல்லாம் பிரஷ்டர்களாகவும், ஒழுக்கமுடையோரை நிந்திக்

கின்றவர்களாகவும், பெரியோரை வணங்காதவர்களாகவும், தரித்திரத்தில் மூழ்கினவர்களாகவும், தெய்வசம்பந்தமான தவந் தியானம் ஒழுக்க முதலியவற்றாலுண்டாகும் முகவிலாசமாகிய தேஜசில்லாதவர்களாகவும், அசத்தியமுள்ளவர்களாகவும், பாபபுத்தியுடையவர்களாய் நித்தியகர்மாநுஷ்டானத்திற் பிரியமற்றதூர்த்த நடையுடையவர்களாகவும், பரமேஸ்வரனுடைய பாதகமலப்பொகுட்டை நெருங்கி அதிலுள்ள மதுவையுண்ணும் அறிவில்லாமல் தூரத்திலிருந்து வட்டமிட்டுலவிச் செல்கின்ற வண்டுகளைப்போல் எதற்கும் குயுக்திகளையே சொல்லிக்கொண்டு சுகானுபவத்தை யிழந்துபோகத்தக்க புத்தியுடையவர்களாகவுமிருப்பர்.

அன்றியும், உடம்பைச் சுடுகின்ற முத்திரை யுடையவர்களாகவும், முகத்தில் முதலையைப்போலும் விசித்திரமான சின்னங்களைப் படைத்தவர்களாகவு மிருக்கத்தக்க மாநுடர்களே மேன்மேலுமுண்டாவார்கள். இப்படிப்பட்டவர்களால் இவ்வுலகங்கெடும். இவர்களை இந்திரனுங் கண்டஞ்சுவான். இந்த மகாபாபிகள் கலியின் கொடுமையைப்பார்த்து வியாகூலமடைந்தவனும் முகவிலாசமொழிந்து உக்கிரத்தோடிருக்கின்ற யமதருமனுடைய கோரப்பல்லடியிலகப்பட்டு அவனுக் காகாரமாயிருப்பவரேயன்றிக் காலகாலராய்ச், சூலபாணியராய், சந்திரசேகரராய் விளங்கும் பரமேஸ்வரராகிய சங்கரருடைய திருவடிக்கு ஆளாயிருப்பவரல்லர். அரன்றிருவடிக்காளாகாத அரட்டர்களெல்லாம் அதிகரித்திருப்பாராதலால் பூமியும் வீரமில்லாமலிருக்கும். அதனால் பூமியிற்பிறக்கிற மாநுடாதி சரீரங்களெல்லாம் பெருத்திருந்தாலும் சிறுத்திருந்தாலும் வீரியமில்லாதனவாகவே யிருக்குமன்றி வீரியத்தோடிரா வென்க.

---

## விஞ்ஞாபனம்.

அயலவர் வெளியிட்டுள்ள பத்திரிகைகள் முதலியவற்றினின்றும் எடுத்து வெளியிடப்படும் விஷயங்களில் தோன்றும் ஐயந்திரிபு முதலியவைகளுக்கு இப்பத்திரிகாசிரியர் உத்திரவாதியல்லர்.